பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 17 புதன்கிழமை 03.11.2021 கதிர் 226

## ஆசன முற்பதிவுகள் இன்று முதல் ஆரம்பம்

(இ.கலையமுதன்)

காங்கேசன்துறை - கல்கிசை இடையிலான காலை நேர ரயில் சேவைக்கான ஆசன முற்பதிவுகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் ரயில் நிலைய பிரதம அதிபர் ரி.பிரதீபன் அறிவித்துள்ளார். ☞2

## யாழ்ப்பாணத்தில் தபால் ஊழியர்கள் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் தபாலக நிர்வாகச் சிக்கலுக்கும், ஸ்திரமற்ற நிர்வாகத்துக்கும் எதிராக தபால் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் இன்று யாழ். பிரதான அஞ்சல்வளாகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதில் நிம்மதியாகக் கடமையாற்ற விடுங்கள், மழை வெயில் என்று பாராது கடமையாற்றும் ஊழியருக்கு மதிப்பளி, யாழ். தபாலக நிர்வாக கட்டமைப்பை மாற்று, ஆரோக்கியமான நிர்வாக சூழலை எற்படுத்தி கடமையாற்ற விடு, உயர் அதிகாரியே அடிமைத்தனம் செய்யாதே, அராஜக நிர்வாகத்தை திணிக்காதே போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தமக்கான நீதியைப் பெற்றுதரக் கோரி எட்டு அம்சங்களை உள்ளடக்கிய மகஜரும் யாழ். மாவட்ட செயலக அரச அதிபர் க.மகேசன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன என்று யாழ். மாவட்ட தபாலக தொழிற்சங்கத் தலைவர் ☞2

# மீண்டும் பெரும் தொற்று பரம்பல் ஏற்பட வாய்ப்பு!



## தீபாவளிக் காலத்தில் பொறுப்புடன் செயற்படுங்கள்; வடக்கு மக்களிடம் சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

பொதுமக்கள் அனைவரையும் தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் பொறுப்புடனும், அவதானத்துடனும் செயற்படுமாறு வேண்டி நிற்கின்றோம் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். ☞2

## முகமாலையில் 316 ஏக்கர் காணி விடுவிப்பு

(இ.கலையமுதன்)

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள முகமாலையில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் இன்று மக்களிடம் கையளிக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , கிராமிய வீடமைப்பு மற்றும் கட்டடவாக்க இராஜாங்க அமைச்சர் இந்திக்க ☞2



## வட மாகாண பாடசாலைகளுக்கு வெள்ளியன்று விசேட விடுமுறை

(ந.லோகதயாளன்)



வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை விசேட விடுமுறை வழங்க மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு இது தொடர்பான அறிவுறுத்தலை அவர் இன்று வழங்கியுள்ளார். ☞2

## மேலும் 57 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 57 பேர் ☞2

## ஆசிரியர்களுக்கு ஆதரவாக பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட பாடசாலைமாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலைகளுக்குமுன்னால் அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள ☞2




## சேதன பசளை இராணுவத் தளபதியால் யாழ். விவசாயிகளுக்கு வழங்கிவைப்பு!



(எஸ்.நிதர்ஷன்)

நச்சுத் தன்மையற்ற இயற்கை வழியில் இராணுவத்தினரால் உருவாக்கப்பட்ட சேதன பசளை உற்பத்திகள் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஆசன முற்பதிவுகள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறையிலிருந்து அதிகாலை 5.30 மணிக்கும் யாழ்ப்பாணம் முதன்மை ரயில் நிலையத்திலிருந்து 6.10 மணிக்கும் சேவையை ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட ரயில் சேவை நாளை முதல் சேவையை மீள ஆரம்பிக்கவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு - யாழ்ப்பாணம் இடையே குளிரூட்டப்பட்ட முதலாம் வகுப்பு ஆசனப் பதிவுக் கட்டணமாக ஆயிரத்து 400 ரூபாவும் இரண்டாம் வகுப்புக் கட்டணமாக 800 ரூபாவும் அறவிடப்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முற்பதிவு இன்றி சாதாரண வகுப்பில் பயணம் செய்பவர்களுக்கு 350 ரூபா கட்டணம் அறிவிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமுகம் சுபாகரன் தெரிவித்தார்.

## முகமாலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுருத்த கிளிநொச்சி, மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கண்ணிவெடி அகற்றப்பட்ட 316 ஏக்கர் காணியை பொதுமக்களிடம் கையளித்தனர்.

போர்க்காலத்தில் இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கிடையில் கடும் யுத்தம் இடம்பெற்ற பகுதியாகவும் முன்னரங்க பிரதேசமாகவும் முகமாலை பிரதேசம் காணப்பட்டது. இதன் காரணமாக அதிகளவு கண்ணிவெடிகள் மற்றும் அபாயகரமான வெடிக்காத வெடிபொருள்கள் நிறைந்த பிரதேசமாக காணப்பட்ட முகமாலையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் தொடர்ச்சியாக கண்ணி வெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் தற்போது கண்ணி வெடி அகற்றப்பட்டு பாதுகாப்பான பிரதேசமாக உறுதிப்படுத்தப்பட்ட 316 ஏக்கர் பரப்பளவு நிலம் இன்று பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.

## வட மாகாண .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை வியாழக்கிழமை இந்துக்களின் தீபாவளி பண்டிகை இடம்பெறுவதால் பொது விடுமுறை நாளாகும். அதனால் மறுநாள் வெள்ளிக்கிழமையும் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் விசேட விடுமுறை வழங்கப்படுவதால் பதில் நாளாக எதிர் வரும் நவம்பர் 13ஆம் சனிக்கிழமை பாடசாலைகள் இடம்பெறும் என்று மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

## ஆசிரியர்களுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பாட்டுக்குத் தீர்வு கோரி கவன வீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டமானது வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் முன்னால் இன்று மதியம் நடைபெற்றது.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மற்றும் பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி என்பவற்றில் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டோர், அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வை, இலவசக் கல்வியை வியாபாரமாக்காதே, கொத்தலாவ சட்ட மூலத்தை நிறுத்து, சுபோதினி அறிக்கையை நடைமுறைப்படுத்து, இலவசக் கல்விக்கு 6 வீதத்தை ஒதுக்கு உள்ளிட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டங்களில் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (100)

## சேதன பசளை இராணுவத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று மதியம் 1.30 மணியளவில் பலாலியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவால் சேதன பசளை உற்பத்திகள், கூட்டெருக்கள், இலைக் கரைசல்கள் என்பன சம்பிரதாயபூர்வமாக விவசாயிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கையின் விவசாயத்திலே முழுமையாக சேதனப் பசளையை உபயோகப்படுத்த வேண்டும் என்ற ஜனாதிபதியின் நோக்கத்துக்கமைவாக இராணுவத்தினரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளே இன்று அறிமுகம் செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி ஜகத் கொடித்துவக்கு, யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள் உட்படப் பல உயர் இராணுவ அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.





## மேலும் 57 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகம் இதனை அறிவித்துள்ளது.

இந்நிலையில், இதுவரை தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 640 ஆக உயர்வடைந்துள்ளது.

## மீண்டும் பெரும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது-

எமது நாட்டில் இந்துப் பெருமக்கள் தற்போது தீபாவளிப் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர். தற்போது நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், இறப்புக்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சி அடைந்திருந்தாலும் தினமும் நாட்டில் 500 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்படுவதுடன், இறப்புக்களும் தொடர்ந்து ஏற்பட்ட வண்ணம் உள்ளன.

இந்த ஆண்டு சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டங்களின் பின்னர் எமது நாட்டில் பெரும் கொரோனாத் தொற்றுப் பரம்பல் ஏற்பட்டதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இந்நிலையில் பொதுமக்கள் மிகவும் பொறுப்புடனும், அவதானத்துடனும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி இப்பண்டிகையைக் கொண்டாட வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

இல்லாவிடின் சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் ஏற்பட்டதைப் போன்று பெரும் தொற்றுப் பரம்பல் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, இந்நிலையைக் கருத்தில் கொண்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவது சம்பந்தமாகப் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தீபாவளிப் பண்டிகைக்காகப் பொது மக்கள் புத்தாடைகளை வாங்குவதற்காக வர்த்தக நிலையங்களில் ஒன்று கூடும்போதும், ஆலயங்களில் வழிபாடுகளுக்காக ஒன்று கூடும்போதும் கொரோனா சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பாக கைகளை சுத்தம் செய்தல், முகக்கவசங்களை சரியான முறையில் அணிந்து கொள்ளல், சமூக இடைவெளியை பேணுதல் போன்றவற்றை இறுக்கமாகக் கடைப்பிடிக்கவும்.

பொதுமக்கள் பெருமளவில் ஒன்று கூடும் நிகழ்வுகளை இயலுமான வரை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எனவே, பொதுமக்கள் அனைவரையும் இப்பண்டிகை காலத்தில் பொறுப்புடனும், அவதானத்துடனும் செயற்படுமாறு வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மறுக்கப்படும் நீதி

வருடம் தோறும் பல சர்வதேச தினங்கள் வந்து போகின்றன. அந்த வகையில் நேற்று ஒரு சர்வதேச தினம் நம்மைக் கடந்தது. அது ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிவோருக்குத் தண்டனை விலக்களிப்பதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம்.

அந்த தினத்தில்தான் – 2021 நவம்பர் 2 ஆம் திகதிதான் – ஹேக் நகரில் உள்ள நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தில் ஊடகவியலாளர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை பற்றிய சுயாதீன விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க மற்றும் மெக்ஸிக்கோ, சிரியா ஆகிய நாடுகளில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட மற்றைய இரு பத்திரிகையாளர்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்திருக்கும் ஹேக் நகரின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் அடுத்த ஆண்டு மே 3 ஆம் திகதி உலக ஊடக சுதந்திர தினத்துக்கு முன்னர் தனது விசாரணைகளை முடித்துத் தீர்ப்பைப் பகிரங்கப்படுத்தும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இயங்கும் ஹேக் நகரில்தான் நிரந்தர மக்கள் தீர்ப்பாயமும் இயங்குகின்றது. சர்வதேசரீதியில் மதிப்பார்ந்த உயர்தகுதியுடைய பிரமுகர்களை நீதியாளர்கள் மற்றும் சட்டவாளர்களாகக் கொண்ட இந்த ஆயத்தின் முடிவுகள் யாரையும் கட்டுப்படுத்தா, யார் மீதும் தனது முடிவை – தீர்ப்பை – திணிக்கும் அதிகாரமோ, நியாயாதிக்கமோ அதற்குக் கிடையாது. எனினும் அதன் தீர்ப்பு, முடிவு சர்வதேச ரீதியில் சட்ட அங்கீகாரம் ஏதும் இல்லாவிடினும், சம்பந்தப்பட்ட விடயத்தில் உண்மையை வெளிப்படுத்தும் உரைகல்லாகக் கருதப்படக்கூடியது.

'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. உண்மைக் கொலையாளிகளும், அதற்குப் பின்புலத்தில் இருந்த சூத்திரதாரிகளும் சட்டத்தின் முன் கொண்டுவரப்படவில்லை. குற்றவாளிகளுக்குத் தண்டனை விலக்களிக்கும் கேவலம் இவ்விடயத்தில் தாராளமாகத் தொடர்கின்றது.

ஆனால் இந்த வழக்கை இலங்கை விடயத்தில் ஓர் அடையாள சம்பவமாகக் கையில் எடுத்திருக்கின்றது நிரந்தரமக்கள் தீர்ப்பாயம்.

இந்த வழக்கில், உண்மைக் குற்றவாளிகள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகின்றார்கள் என்பதிலும் பார்க்க, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க – நீதியை நிலைநாட்டிக் கொள்ள – பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்த – வேண்டுமென்றே தவறியமை மூலம் தண்டனை விலக்களிப்பை மேற்கொண்டு வரும் இலங்கை ஆட்சிப் பீடமே – அதிகார மையமே – குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றது எனலாம்.

இலங்கையில் ஊடகங்களுக்கு எதிராக மிக மோசமான அடக்குமுறை அரங்கேறிய இருண்ட காலமாக 2005 – 2010 காலப் பகுதி கருதப்படுகின்றது. அந்தக் காலகட்டத்தில் 22 ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர். அல்லது காணாமலாக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள்.

லஸந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட போன்ற ஓரிரு சிங்கள ஊடகவியலாளர்களுக்கு எதிரான கொடூரங்கள் குறித்து பெயரளவுக்கான – கண்துடைப்பு செயற்பாடு போன்ற – விசாரணை நடவடிக்கைகளாவது முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தமிழ் ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிரான கொடூரங்கள், அடாவடித்தனங்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையுமே எடுக்கப்படவில்லை.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு இருபது ஆண்டுகள் கடந்துவிட்டன. அது தொடர்பான சந்தேகநபர்களுக்கு எதிரான வழக்குகள் கைவிடப்படுகின்றன என இலங்கையின் சட்டமா அதிபர் அறிவித்தும் விட்டார். இதுதான் ஊடகங்களுக்கு – குறிப்பாக தமிழ் ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் – எதிரான குற்றங்களில் நீதியை நிலைநாட்டும் நிலைமை.

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பல்வேறு கொடூரங்களில் ஒன்றுக்குத் தன்னும் – ஒருவர் தன்னும் – தண்டிக்கப்படவேயில்லை என்பதுதான் இலங்கை ஆட்சித்துறையின் சிறப்பு; சட்ட, நீதித்துறையின் மாண்பு....!

# சட்டம் இயற்றும் அதிகாரம் ஞானசாரருக்கு கிடையாது!

## ருவான் விஜேவர்தன தெரிவிப்பு



'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான சட்டங்களை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே இருக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் பேசிய அவர் –

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கருத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதி செயலணிக்கு இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

முஸ்லிம் சமூகத்தையும் நீதித்துறையையும் பகைத்துக்கொண்டது மட்டுமல்லாமல் ஒரு தமிழரைக் கூட குறித்த செயலணியில் நியமிக்காமல் அந்த சமூகத்தை ஜனாதிபதி அவமதித்துள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் உண்மையான தலைவர் அனைத்து சமூகங்களையும் ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைப்பார் என குறிப்பிட்ட ருவான் விஜேவர்தன, இந்த நெருக்கடி காலத்தில் அனைவரையும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இயற்கை அழகு, வளங்கள், வரலாறு, பாரம்பரியங்கள் மற்றும் கலாசார பன்முகத் தன்மை ஆகியவற்றைக் கொண்ட இலங்கையில் சமீப காலங்களில், தனிப்பட்ட பொருளாதார ஆதாயங்களுக்காக இயற்கை வளங்களைச் சுரண்டும் நடவடிக்கை இடம்பெறுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

மேலும் காலநிலை மாற்றம் குறித்த உச்சிமாநாட்டில் ஜனாதிபதி பேசிக்கொண்டிருக்கும்போது, கடந்த இரண்டுவருடங்களாக நமது சுற்றுச்சூழலுக்கு மிக மோசமான அழிவு ஏற்பட்டுள்ளது என்பதைத் தான் வருத்தத்துடன் கூறுகிறேன் எனவும் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டார்.

# சீரற்ற வானிலை காரணமாக 11 மாவட்டங்கள் பாதிப்பு!

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக இதுவரையில், நால்வர் உயிரிழந்துள்ளமையுடன், 2 பேர் காயமடைந்துள்ளனர்.

இலங்கைக்கு அண்மையாகக் காணப்பட்ட குறைந்த அழுத்தப் பிரதேசம் காரணமாக நாட்டில் கடந்த சில நாள்களாக கடும் மழையுடனான காலநிலை நிலவியது.

இந்த நிலையில், சீரற்ற வானிலையால் 11 மாவட்டங்களில் 1,451 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 821 பேர் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த அனர்த்தத்தால் 4 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ள நிலையில் இருவர் வெள்ளத்தில் சிக்கியும் இருவர் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகியும் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 3 வீடுகள் முழுமையாகவும், 410 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணி தலைவரை மகாநாயக்கர்கள் பரிந்துரைத்தல் வேண்டும்

## இப்படிக் கூறுகின்றார் பொன்சேகா



ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணிக்கு மகாநாயக்க தேரரால் பரிந்துரைக்கப்பட்ட பிக்கு ஒருவரை நியமித்திருக்கலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் –

குறித்த செயலணிக்கு தலைமை தாங்கும் நபர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். எனவே இவ்வாறான நியமனங்கள் தொடர்பாக அரசாங்கம் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இந்த நியமனம் தமது சித்தாந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் என செயலணியின் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். ஞானசார தேரரின் இந்தக் கருத்து, அவர் எவ்வாறு செயலணியை கையாளப் போகிறார் என்பதையே காட்டுகிறது என்றும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார். இதேவேளை இந்நாட்டில் உள்ள கண்டிச் சட்டம், தேசவழமை சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் போன்ற சட்டங்களை யாராலும் நீக்க முடியாது என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

# கிளிநொச்சியில் சுகாதார ஊழியர்களுக்கு மூன்றாவது கொரோனாத் தடுப்பூசி ஏற்றல்!

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னிலையில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்களிற்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகின.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கண்காணிப்பில் பிராந்திய சுகாதார நிலையங்களில் மூன்றாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சரவணபவன் செலுத்திக்கொண்டார். தொடர்ந்து வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் உள்ளிட்டோர் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்டனர். தொடர்ந்து பொலிஸார், படையினர் உள்ளிட்ட முன்னிலை பணியாளர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காடழிப்பை முடிவுக்கு கொண்டு வர உலகத் தலைவர்கள் இணக்கம்!



COP26 காலநிலை உச்சிமாநாட்டின் முதல் பெரிய ஒப்பந்தத்தில், 100க்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் 2030ஆம் ஆண்டிற்குள் காடழிப்பை முடிவுக்குக் கொண்டு வரவும், மாற்றியமைக்கவும் உறுதியளித்துள்ளனர்.

உறுதிமொழியில் கிட்டத்தட்ட 19.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பொது மற்றும் தனியார் நிதி உள்ளது.

கனடா, பிரேஷில், ரஷ்யா, சீனா, இந்தோனேஷியா மற்றும் கொங்கோ ஜனநாயக குடியரசு ஆகிய நாடுகள் உறுதிமொழியில் கையெழுத்திடப்போவதாக தெரிவித்துள்ளன. இந்த நாடுகளில் 85 சதவீத காடுகள் உள்ளன.

சேதமடைந்த நிலத்தை மீட்டெடுக்கவும், காட்டுத் தீயைச் சமாளிக்கவும் மற்றும் பழங்குடி சமூகங்களுக்கு ஆதரவளிக்கவும் சில நிதி வளரும் நாடுகளுக்குச் செல்லும். 28 நாடுகளின் அரசாங்கங்கள் உணவு மற்றும் பாமாயில், சோயா மற்றும் கோகோ போன்ற பிற விவசாயப் பொருள்களின் உலகளாவிய வர்த்தகத்தில் இருந்து காடழிப்பை அகற்ற உறுதியளிக்கும்.

இந்த தொழில்கள் விலங்குகள் மேய்வதற்கு அல்லது பயிர்கள் வளர இடவசதி செய்ய மரங்களை வெட்டுவதன் மூலம் வன இழப்பை ஏற்படுத்துகின்றன.

காடழிப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் முதலீட்டை நிறுத்த உலகின் 30க்கும் மேற்பட்ட பெரிய நிறுவனங்கள் உறுதியளிக்கும். இந்த நடவடிக்கையை வல்லுநர்கள் வரவேற்றுள்ளனர். கடந்த 2014ஆம் ஆண்டு முந்தைய ஒப்பந்தம், காடழிப்பை மெதுவாக்குவதில் தோல்வியடைந்தது. மரங்களை வெட்டுவது காலநிலை மாற்றத்திற்கு பங்களிக்கிறது, ஏனெனில் இது வெப்பமயமாதல் வாயு CO2n உறிஞ்சும் காடுகளை குறைக்கிறது.

கிளாஸ்கோவில் உலகளாவிய மாநாட்டை நடத்தும் பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன், 'பூமியின் காடுகளைப் பாதுகாப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் ஒரு முக்கிய ஒப்பந்தம் இதுவென' கூறியுள்ளார்.

காலநிலை மாற்றத்தைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டுமானால் கிளாஸ்கோவில் இரண்டு வார உச்சி மாநாடு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது

## வேல்ஸில் பறவைக் காய்ச்சல் மருத்துவர்கள் ஆய்வு நடத்தல்

வடக்கு வேல்ஸில் உள்ள ஒரு வளாகத்தில் கோழி மற்றும் காட்டுப் பறவைகளுக்கு பறவைக் காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளதாக வேல்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ரெக்ஸ்ஹாம் கவுண்டியில் உள்ள ஒரு வளாகத்தில் எச்.5.என்.1 வைரஸ் மாறுபாடு இருப்பதை வேல்ஸின் தலைமை கால்நடை மருத்துவர் உறுதிப்படுத்தினார்.

உடனடியாக அந்த இடத்தைச் சுற்றி தற்காலிக கட்டுப்பாட்டு மண்டலங்கள் விதிக்கப்பட்டுள்ளன என வேல்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அப்பகுதியில் காணப்படும் இறந்த காட்டுப் பறவைகள் வைரஸுக்கு சாதகமாக சோதனை செய்துள்ளன. மேலும் அவை ஆதாரமாக இருப்பதாக நம்பப்படுகிறது. இதுதவிர அப்பகுதியில் கால்நடை மருத்துவ ஆய்வு நடந்து வருகிறது.

ஜனவரி மாதம் ஆங்கிலேசியில் உள்ள ஒரு



வளாகத்தில் ஃபெசன்ட்கள் மத்தியில் கண்டறியப்பட்ட ஸூதிலிருந்து வேல்ஸில் இந்த நோய்க்கான முதல் உறுதிப்படுத்தல் இதுவாகும்

## காபூல் மருத்துவமனை மீது தாக்குதல் 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள இராணுவ மருத்துவமனையில் துப்பாக்கி மற்றும் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்த தாக்குதலில் 20க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்றும் குறைந்தது 16 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

400 படுக்கைகள் கொண்ட சர்தார் தாவுத் கான் மருத்துவமனையை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ்-கே, பொறுப்பேற்றுள்ளது. இதற்கு முன்னர் பொதுமக்கள் மற்றும் தலிபான் போராளிகளை குறிவைத்து நடத்தப்பட்ட பல தாக்குதல்களுக்கும் குறித்த அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில் தாக்குதலை நடத்தியவர்களில் நான்கு பேரை சுட்டுக் கொன்றோம் எனவும், ஒருவரை உயிருடன் பிடித்துள்ளோம் எனவும் தலிபான் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா துருப்புக்கள் மீளப்பெறப்பட்டதை அடுத்து ஓகஸ்ட் மாதம் நாட்டை முழுமையாக தலிபான்கள் கைப்பற்றிய நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதம், காபூல் சர்வதேச விமான நிலையத்தில் ஐ.எஸ்.-கே நடத்திய குண்டு தாக்குதலில் 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் 13 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காலநிலை உச்சிமாநாட்டில் சீனா, ரஷ்யா; பங்குபற்றவில்லை; பைடன் விமர்சனம்



கிளாஸ்கோவில் இடம்பெறும் காலநிலை உச்சி மாநாட்டிற்கு சமுகமளிக்காத சீனா மற்றும் ரஷ்யாவின் தலைவர்களை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விமர்சித்துள்ளார். இந்த மாநாட்டில் சீனா கலந்துகொள்ளாதமை பெரும் தவறு என குறிப்பிட்ட ஜோ பைடன், பற்றியெரியும் வனப்பகுதி குறித்து ரஷ்ய ஜனாதிபதி மௌனமாக இருக்கிறார் எனவும் விமர்சித்திருந்தார்.

சீனா, ரஷ்யா மற்றும் சவுதி அரேபியா உட்பட ஏனைய நாடுகள் இதுவரையான பேச்சுகளில் ஆற்றிய பங்கு குறித்து வினவிய போதே அமெரிக்க ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

காலநிலை உச்சிமாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் சீனத் தலைவர் ஜி ஜின்பிங்கும் கலந்து கொள்ளவில்லை.

எவ்வாறாயினும், எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இரண்டு வாரங்கள் நடைபெற உள்ள குறித்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இரு நாடுகளும் தமது பிரதிநிதிகளை அனுப்பியுள்ளது.

உலகிலேயே சுற்றாடல் மாசுபடும் வகையிலான வாயுக்களை வெளிப்படுத்தும் நாடுகளில் சீனா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் முதல் ஐந்து இடங்களில் உள்ளன.

இதேவேளை 2030 ஆம் ஆண்டுக்குள் மெதேன் அளவைக் குறைக்கவும் அதே ஆண்டு காடழிப்பை முடிவுக்குக் கொண்டு வரவும் அதனை மாற்றியமைக்கவும் மாநாட்டில் உலகத் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

காடழிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உறுதிமொழியில் சீனாவும் ரஷ்யாவும் கையெழுத்திட்டுள்ள நிலையில், வனப்பகுதிகளைப் பாதுகாக்க வலுவான மற்றும் மிகதீவிரமான நடவடிக்கைகளை ரஷ்யா எடுத்து வருகின்றது என ரஷ்ய ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 7,965 கோடி ரூபாவுக்கு ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள் வாங்குவதற்கு இந்திய பாதுகாப்பு அமைச்சு ஒப்புதல்



12 இலகுரக ஹெலிக்கொப்டர்கள் உள்பட 7,965 கோடி ரூபா மதிப்பிலான ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை வாங்குவதற்கு இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த விவகாரத்தில் முக்கிய முடிவெடுக்கும் அமைப்பான பாதுகாப்பு கொள்முதல் அமையத்தின் (டி.ஏ.சி.) கூட்டத்தில் இந்தக் கொள்முதல் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்துஸ்தான் ஏரோநொட்டிக்ஸ் லிமிட்டெட் நிறுவனத்திடம் இருந்து 12 ஹெலிக்கொப்டர்களை வாங்குவதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததோடு, கடற்படைப் போர்க்கப்பல்களின் கண்காணிப்பு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக பாரத் எலக்ட்ரோனிக்ஸ் லிமிட்டெட் நிறுவனத்திடமிருந்து உபகரணங்களை வாங்குவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் இந்தத் தகவல்கள் தெரியவந்துள்ளன. இந்த இராணுவ உபகரணங்களுக்கான கொள்வனவுக்கு, 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் நாட்டின் வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் பாதுகாப்புப் போன்றவற்றில்கவனம்செலுத்துவதற்காகஒப்புதல்அளிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு லடாக்கில் சீனாவுடனான எல்லைப்பிரச்சினையால் இந்திய ஆயுதப்படைகள் எல்லையில் குவிக்கப்பட்டிருக்கும் நேரத்தில், இந்தியாவால் இராணுவத் தளவாடங்கள் வாங்கப்படுகின்றமை சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மாசுபாடுகள், பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ள சுவிட்ஸர்லாந்து நிறுவனத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம்



பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வது குறித்து ஆய்வுசெய்து, ஆலோசனை வழங்கவும் உதவிகள் புரியவும் சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுடன் தமிழக அரசு புரிந்துணர்வுஒப்பந்தத்தைமேற்கொண்டுள்ளது.

அண்மையில் பருவநிலை மாற்றம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சுவிட்ஸர்லாந்து தூதர் ரால்ப் ஹெக்னர் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அந்தச் சந்திப்பில், பருவநிலை மாற்றத்தால் தமிழகம் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவான ஆலோசனை நடத்தப்பட்டது. வெப்பமயமாதல், அதீத கன மழை உள்ளிட்டவை குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இதன்பின்னர் ஐ.சி.எல்.இ.ஐ. என்ற சுவிட்ஸர்லாந்து நிறுவனத்துடன் இது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அந்த நிறுவனத்துடன், தமிழக அரசு செய்துள்ள ஒப்பந்தத்தின்படி மாசுபாட்டை எவ்வாறாக தவிர்ப்பது, அதற்கான ஆலோசனைகளை தமிழக அரசு அதிகாரிகளுக்கு வழங்குவது, ஒட்டுமொத்தமாக பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ள தமிழக அரசுக்குத் தேவையான அனைத்து விதமான தரவுகள் மற்றும் உதவிகளை வழங்குதல போன்றவற்றை இந்த நிறுவனம் வழங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழக அரசு 14 வகையான பிளாஸ்டிக் பொருள்களை முற்றிலுமாக ஒழிப்பதற்கான திட்டத்தை ஏற்கெனவே மிகத் தீவிரமாக கையில் எடுத்திருக்கிறது. பொலித்தீன் பைகளைத் தவிர்த்துவிட்டு, அதற்கு மாற்றாக காகிதப் பைகள் மற்றும் துணிப்பைகளைப் பயன்படுத்துவதற்கான நடைமுறைகளைக் கொண்டுவர, தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக 'மஞ்சள் பை' திட்டம் என்ற பெயரில் திட்டமொன்றைத் தமிழக அரசு விரைவில் செயல்படுத்தவிருக்கிறது.



## முல்லைப் பெரியாறு அணை விவகாரம்; ஒன்பதாம் திகதி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்

முல்லைப் பெரியாறு அணையில் நீர் இருப்பை அதிகரிக்க வலியுறுத்தி ஐந்து மாவட்ட தலைநகரங்களில் வரும் 9 ஆம் திகதி அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி இருவரும் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என்றும், 142 அடி வரை நீர் தேக்கப்படாமல் கேரளாவின் நிர்ப்பந்தத்தின் காரணமாக நீர் இருப்பைத் தமிழக அரசு குறைத்துள்ளது பாரதூரமானது, அதை அனுமதிக்க முடியாது, எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விதி மீறிய இந்தியர்களின் 76,967 பதிவுகள் செப்டெம்பரில் நீக்கப்பட்டன என்கிறது கூகுள்




கடந்த செப்டெம்பர் மாதத்தில் மட்டும் விதிமுறைகளை மீறிய இந்தியர்களின் சுமார் 76,967 பதிவு களை நீக்கி யுள்ளதாக அறிக்கையொன்றின் மூலமாக கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தனியுரிமை, காப்புரிமை, பாலியல் உள்ளடக்கம், போலித் தகவல்கள், நீதிமன்ற உத்தரவு முறல், சட்டமீறல், அவதூறு என பல்வேறு பிரிவுகளின் கீழ் கூகுளின் இந்தியப் பயனர்கள் தெரிவித்திருந்த 29,842 புகார்களின் அடிப்படையில் 76,967 பதிவுகளை நீக்கியுள்ளதாக கூகுள் குறிப்பிட்டுள்ளது. கூகுள் நிறுவனத்தின் தனி நபர் உரிமைக் கொள்கையை மீறிய 4,50, 246 பதிவுகளையும் தானியங்கி முறையில் அடையாளம் கண்டு நீக்கியுள்ளதாகவும் அறிவித்துள்ளது. கடந்த மே மாதம் அமுலுக்கு வந்த இந்தியாவின் புதிய தகவல் தொழிநுட்ப விதிகளின் காரணமாக கூகுள் இந்த விவரங்களைப் பகிரங்கமாக வெளியிட்டுள்ளது. கடந்த ஏப்ரலில் 59350, மே மாதத்தில் 71,132, ஜூனில் 83,613, ஜூலை மாதம் 95,680 மற்றும் ஓகஸ்டில் 93,550 பதிவுகள், பயனர்கள் கொடுத்த புகார்களின் அடிப்படையில் நீக்கப்பட்டுள்ளன என கூகிளின் அறிக்கை குறிப்பிடுகிறது.

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவிப் பெயரில் தமிழக மக்களுக்கு சசிகலா தீபாவளி வாழ்த்து



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்ற பதவிப் பெயரில் தமிழக மக்களுக்கு சசிகலா தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

'இருள் விலகி ஒளி பிறக்கும் தினமாகவும், தீமைகள் அகன்று நன்மைகள் பிரகாசிக்கும் தினமாகவும் கொண்டாடப்படுகின்ற இந்த நன்னாளில் அனைவருக்கும் என் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும் தொற்றான கொரோனா என்னும் கொடிய நோயை வென்று மனிதகுலம் மீண்டும் புத்துயிர் பெற்று கொண்டாடும் வகையில் இந்தத் தீபாவளித் திருநாளில் அனைவரும் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும். தடுப்பூசியையும் தவறாமல் செலுத்திக் கொண்டு கவனமாக சந்தோசத்துடன் இந்தத் தீபாவளித் திருநாளைக் கொண்டாட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த இனிய திருநாளில் நாடெங்கும் அமைதியும் அன்பும் தழைக்கட்டும். வேற்றுமையில் ஒற்றுமை ஓங்கட்டும். அனைவரது வாழ்விலும் வளமும் நலமும் பெருகட்டும் என்று இறைவனை வேண்டி அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது இனிய தீபாவளி வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்' என்று தனது வாழ்த்துச் செய்தியில் சசிகலா குறிப்பிட்டுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்ற பதவிப் பெயரில் சசிகலா வெளியிட்டுள்ள இந்தத் தீபாவளி வாழ்த்துச் செய்தி, கட்சி வட்டாரத்தையும் தாண்டிய பரபரப்பான செய்தியாகப் பார்க்கப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# ஆசிரியர்களின் போராட்டத்துக்கு பெற்றோர்களும் ஆதரவுக் கரம்

பாடசாலை ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு வெகு விரைவில் அரசு தீர்வு வழங்க வேண்டும் எனும் கோரிக்கைகளை முன்வைத்து திருகோணமலை சுமேதங்கர மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களது பெற்றோர்கள் ஒன்றிணைந்து இன்று (புதன்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது கல்வி நடவடிக்கைகள் மீண்டும் அரம்பிக்கப்பட்டுள்ள இந்நிலையில் பாடசாலை அதிபர் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தின் காரணமாக மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தனர்.

குறித்த பிரச்சினைக்கு அரசு வெகு விரைவில் தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும் எனக் கோரிக்கையை முன்வைத்து குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள், இந்நிலை தொடரும் பட்சத்தில் மாணவர்களது கல்வி நிலையானது கேள்விக்குறியாக மாறிவிடும் என்று தாம் அச்சத்தில் இருக்கிறோம் எனவும் கவலை தெரிவித்தனர்.

# திடீரென குடியேறுபவர்களுக்கு மட்டும் எவ்வாறு பத்திரங்கள் கிடைக்கின்றன?

## ஏறாவூர்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் வ.சுரேந்தர் கேள்வி



எமது மாவட்டத்தில் தமிழர்கள் தற்போது வரை காலாகாலமாக வாழ்கின்ற காணிகளுக்கே இன்னும் உறுதி, காணிப்பத்திரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் திடீர் குடியேற்றம் பெறுபவர்கள் மாத்திரம் எவ்வாறு காணி, உறுதிப் பத்திரங்களுடன் வருகிறார்கள்? என ஏறாவூர்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் வ.சுரேந்தர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் திட்டமிட்ட குடியேற்றங்கள் மற்றும் காணிப்பத்திரங்கள் வழங்குகின்ற செயற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பெற்று எமது சமூகம் வெறுமையாகவே உள்ளது. இந்த மாவட்டத்தில் எமது மக்கள் எத்தனை எத்தனை பிரச்சினைகளுக்கு தான் முகங்கொடுக்கின்றார்கள்.

எமது மாவட்டத்தில் இடம்பெறுகின்ற திடீர் திடீர் புதிய குடியேற்றங்களால் மக்கள் மிகவும் அவதியுற்றுள்ளனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட வருடங்கள் தமிழர்கள் வாழ்கின்ற காணியில் தற்போது வரை வசித்து வருபவர்களுக்கே இன்னும் உறுதி, காணிப்பத்திரம் என்பன கிடைக்கவில்லை. ஆனால் திடீர் குடியேற்றம் பெறுபவர்கள் மாத்திரம் எவ்வாறு காணிப் பத்திரத்துடன் வருகிறார்கள். இவ்வாறான விடயம் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றது.

ஒரே நாடு ஒரே சட்டம் என்று தான் சொல்லப்படுகின்றது. ஆனால் இந்தப் பொதுஜன பெரமுனவின் ஆட்சியில் வெவ்வேறான சட்டங்களையும், மாற்று நடவடிக்கைகளையுமே காணக்கூடியவாறு உள்ளது.

தற்போதைய நிலைவரத்தை எடுத்து பார்ப்போமானால் அவர் சரி இவர் பிழை என்று பழி போடாமல் மட்டக்களப்பு மாவட்ட இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாக ஏற்படுத்தப்படுகின்ற மறைமுக குடியேற்றங்களை தடுப்போம். கட்சி பிரிவினை மறந்து இராஜதந்திர முறையில் இவ்விடயங்கள் வென்றெடுக்கப்பட வேண்டும்

எனவே அனைத்து அரசியல் பிரமுகர்களும் இந்த விடயத்தை வைத்து பிரபல்யத்திற்காக ஓடாமல் அமைதியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டிய நடவடிக்கைகளை ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்

# பொதுமக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள்



தீபாவளி பண்டிகைக் காலத்தில் பொது மக்களை மிகுந்த அவதானத்துடனும் சமூகப் பொறுப்புடனும் செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடளாவியரீதியில் கொரோனாத் தொற்று தொடர்பான அச்சம் முழுமையாக நீங்காத நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கொரோனாத் தொற்று முழுமையாக நீங்காத நிலையினை கருத்திற்கொண்டு பொது மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தாக்கம் குறைவடைந்து வரும் நிலை காணப்பட்டாலும், தீபாவளி பண்டிகைக் காலத்தில் மக்கள் கூட்டமாக வெளியில் நடமாடுவது அவதானிக்கப்படுவதனால் அவ்வாறான இடங்களிற்கு செல்லும் போது சுகாதாரப் பாதுகாப்புடன் செயற்பட்டு கொரோனாவில் இருந்து பாதுகாத்து கொள்வதற்காக பொதுமக்களை மிகவும் அவதானத்துடன் செயற்படும்படி அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனவே மக்கள் இவ் விசேட பண்டிகை காலங்களில் சனநெரிசல் அதிகமான இடங்கள் மற்றும் ஆலயங்கள் போன்றவற்றிற்கு செல்வதை இயன்றளவு தவிர்த்து வீட்டிலிருந்தவாறே தத்தமது குடும்பத்தாருடன் மத வழிபாடுகளில் ஈடுபடுமாறும், அவசர தேவைகளுக்காக மாத்திரம் வெளியில் செல்வது சாலச் சிறந்ததாக அமையுமெனவும், அவ்வாறு செல்லும் போது கண்டிப்பாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றல் வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். இம்முறையும் எளிமையான முறையில் பண்டிகைகளை பொதுமக்கள் கொண்டாடுவதுதான் கொரோனாத் தொற்றை குறைத்துக்கொள்ள ஏதுவாக இருக்கும் என சுகாதாரத் துறையினர் மக்களுக்கு தொடர்ச்சியாக ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

கொரோனாத் தொற்றினை நமது இலங்கையில் இருந்து இல்லாது ஒழிப்பதற்கு ஒவ்வொரு தனி மனிதரும் தங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி குறைவடைந்துவரும் கொரோனா பரவலை முற்றாக இல்லாதொழிப்பதோடு, சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகளிற்கு அமைவாக தங்களது நாளாந்த கருமங்களை ஆற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

# கிழக்கு மாகாணத்தில் பரவி வரும் வயிற்றோட்டம்

கிழக்கு மாகாணத்தின் சில இடங்களில் குறிப்பாக ஓட்டமாவடி, வாழைச்சேனை மற்றும் ஏறாவூர் பகுதிகளில் இருந்து வயிற்றோட்டம் காரணமாக அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சிறுவர்கள் மாத்திரம் இன்றி பெரியவர்களும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். அவதானம் தேவை என கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் மட்டு. போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான டாக்டர் விஜி திருக்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இதன் அறிகுறிகளாக காய்ச்சல், சத்தி மற்றும் வயிற்றோட்டம் காணப்படும். சில சமயம் இரத்தம் கலந்த சளியுடன் வயிற்றோட்டம் காணப்படும். இது ஒருவகை பற்றீரியா தொற்றினால் ஏற்படுகிறது.

சில சமயம் வயிற்றோட்டம் இல்லாமல் அல்லது குறைவாகவும் சத்தி, வயிற்று வலி மற்றும் வயிறு ஊதுதல் போன்ற குணங்குறிகளுடன் தோன்றலாம். பிள்ளை ஆகாரம்,நீர் அருந்துவது குறைவாகவும் நீர் இழப்பு அதிகமாகவும் இருப்பதால் சோர்வு மற்றும் மயக்க நிலை ஏற்படும். எனவே இவ்வாறான அறிகுறிகள் ஏற்பட்டால் தாமதிக்காமல் வைத்தியசாலையை நாடுவது அவசியம்.

மேலும் கொரோனாத் தொற்றின் பின் சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற Miss-C எனப்படும் பல்தொகுதி அழற்சி நோய் நிலையின் போதும் காய்ச்சல் வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் தோன்றும். எனவே உங்கள் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு காணப்படுமாயின் விரைவாக வைத்தியசாலையை நாடுதல் சாலச்சிறந்தது என குறிப்பிட்டுள்ளார்.

# நமீபியாவையும் வென்றது பாகிஸ்தான் அணி 4 வெற்றிகளோடு அரையிறுதிக்குள் நுழைந்தது



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சூப்பர் - 12 சுற்றின் நேற்றைய இரண்டாவது போட்டியில் நமீபியா அணியை பாகிஸ்தான் அணி 45 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. குழு 2 இல் இடம்பெற்றுள்ள பாகிஸ்தான் அணி, தொடர்ச்சியாக நான்கு வெற்றிகளைப் பெற்று அரையிறுதிக்குள்ளும் நுழைந்தது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மொஹமட் ரிஸ்வான் ஆட்டமிழக்காது 79 ஓட்டங்களையும், அணித்தலைவர் பாபர் அசாம் 70 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் சேர்த்தனர். நமீபியா அணியின் டேவிட் வீசே மற்றும் ஜான் ப்ரைலின்க் இருவரும் ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

இதையடுத்து கடினமாக இலக்கை நோக்கிக் களமிறங்கிய நமீபியா அணியால் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களையே எடுக்க முடிய, பாகிஸ்தான் அணி இந்தப் போட்டியில் 45 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. பாகிஸ்தான் அணியின் ஹசன் அலி, இமாட் வசிம், சதாப் கான் மற்றும் ஹரீஸ் ரவூப் நால்வரும் ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக மொஹமட் ரிஸ்வான் தெரிவானார். இம்முறை ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணியைத் தொடர்ந்து அரையிறுதிப் போட்டியில் விளையாடுவதற்கு பாகிஸ்தானும் தகுதி பெற்றுள்ளது. பாகிஸ்தான் அணி சூப்பர்-12 சுற்றில் தனது கடைசி லீக் போட்டியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஸ்கொட்லாந்து அணியைச் சந்திக்கவுள்ளது. நமீபியா அணி தனது அடுத்த போட்டியில் நியூசிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# தென்னாபிரிக்கா அபாரப் பந்துவீச்சு பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது



ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்க மற்றும் பங்களாதேஷ் அணிகள் விளையாடிய சூப்பர் - 12 சுற்றின் நேற்றைய முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றியடைந்தது. இதன் மூலம், அரையிறுதிச் சுற்றில் நுழைவதற்கான வாய்ப்பினை அந்த அணி அதிகரித்துக்கொண்டுள்ளது.

குழு 1 இற்கான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாடுமாறு பங்களாதேஷ் அணியை அழைத்தது. களமிறங்கிய பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சினைச் சமாளிக்க முடியாமல் 18.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. மஹதி ஹஸன் 27 ஓட்டங்களை எடுத்தார். தென்னாபிரிக்க அணியின் ரபாடா, அன்ட்ரிஜ் நோர்ட்ஜே இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும் சம்ஷி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

85 என்ற இலகுவான வெற்றியிலக்கையுடைய துடுப்பாடிய தென்னாபிரிக்க அணி, 13.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து போட்டியில் வெற்றிபெற்றது. அணித்தலைவர் டெம்பா பவுமா 31 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தார். பங்களாதேஷ் அணியின் தஸ்கின் அஹமட் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் வேகப் பந்துவீச்சாளரான ரபாடா தெரிவானார்.

தென்னாபிரிக்க அணி தனது அடுத்த போட்டியில் எதிர்வரும் சனிக்கிழமை இங்கிலாந்துடன் விளையாடவுள்ளது. பங்களாதேஷ் அணி ஆஸ்திரேலிய அணியினை எதிர்வரும் வியாழக்கிழமை எதிர்கொள்ளவுள்ளது.

# லங்கா பிறீமியர் லீக்கில் கொழும்பு அணியை அமெரிக்க முதலீட்டு நிறுவனம் வாங்கியது

லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரில் விளையாடவுள்ள கொழும்பு அணியின் உரிமத்துவத்தை அமெரிக்காவில் இயங்கி வருகின்ற 27th Investments நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் தலைவருமான அனில் தமானி பெற்றுக்கொண்டுள்ளார்.

27th Investments நிறுவனம் அமெரிக்காவில் உள்ள முன்னணி முதலீட்டு நிறுவனங்களில் ஒன்றாகும். இது வர்த்தக ரீதியிலாக நிலங்களை வாங்குகின்ற பிரதான நிறுவனமாகவும், உணவகங்கள் மற்றும் பொழுதுபோக்குச் சேவைகளுக்கான பல புகழ்பெற்ற நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குகின்ற நிறுவனமாகவும் உள்ளது.

கொழும்பு அணியின் உரிமையாளராக இந்த ஆண்டு லங்கா பிறீமியர் லீக்கில் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஆண்டு நடைபெற்ற முதலாவது லங்கா பிறீமியர் லீக் தொடரானது மிகப் பெரிய வெற்றியைக் கொடுத்திருந்தது. எனவே, இம்முறை தொடருடன் இணைந்துகொள்ளக் கிடைத்தமை தொடர்பில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். கொழும்பு அணியை உலகின் தலைசிறந்த ரி-20 லீக் அணிகளில் ஒன்றாக மாற்றுவேன் என நம்புகிறேன் என அனில் தமானி தெரிவித்துள்ளார்.

கடந்தமுறைகொழும்புகிங்ஸ்என்றபெயரில்விளையாடியிருந்த இந்த அணியின் பெயரில் ஏதாவது மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமா என்பது குறித்து இதுவரை தகவல் வெளியிடப்படவில்லை.

# பொஸ்டன் மரதனில் பங்கேற்பவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி சான்றிதழ் கட்டாயம்!

உலகின் மிகப்பழமையான மரதன் ஓட்டத் தொடரான பொஸ்டன் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்வதற்கு கொரோனாத் தடுப்பூசி சான்றிதழ் கட்டாயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கான போட்டி, ஏப்ரல் 18 ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1897 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் உலகின் மிகப்பழமையான வருடாந்த மரதன் தொடரான பொஸ்டன் ஓட்டப் பந்தயம் இந்த ஆண்டு கடந்த மாதம் நடைபெற்றது. இந்தப்போட்டியில் பங்கேற்றவர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக்கொண்ட சான்றிதழ் அல்லது கொரோனா நெகட்டிவ் சான்றிதழ் கட்டாயம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

கொரோனாப் பெருந்தொற்றின் காரணமாக இந்த ஆண்டு நடைபெற்ற 125 ஆம் ஆண்டு பொஸ்டன் மரதன் போட்டியில், 20 ஆயிரம் பங்கேற்பாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள 126ஆம் ஆண்டு மரதனில் 30 ஆயிரம் பங்கேற்பாளர்கள் அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு அமெரிக்காவின் ஹோப்கிண்டன் பகுதியில் இருந்து இந்தத் தொடர் ஓட்டப் பந்தயம் தொடங்கவுள்ளது. 42 கிலோமீற்றர் தூரத்தை பங்கேற்பாளர்கள் ஓடிக் கடக்க வேண்டும்.

கடந்த ஆண்டு, கொரோனாப் பெருந்தொற்றினால் இந்தப் போட்டி நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வவுனியாவில் பாரிய ஆர்ப்பாட்டம் சிவில் அமைப்புக்கள் தீர்மானம்!

வவுனியாவில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றத்தைக் கண்டித்து எதிர்வரும் 10 ஆம் திகதி நெடுங்கேணியில் அமைந்துள்ள வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்த தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

அநுராதபுரம் வடக்கின் சில கிராமங்களை எல்லை நிர்ணயம் என்ற போர்வையில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கான முனைப்பை அரசாங்கம் எடுத்துள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன், எம். தியாகராசா, தமிழரசுக்கட்சியின் வவுனியா அமைப்பாளர் ந. கருணாநிதி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஜி. ரி. லிங்கநாதன், மாக்ஸிச லெனினிச கட்சி பிரமுகர் இ. பிரதீபன், ஜனநாயக போராளிகள் கட்சி உறுப்பினர், வவுனியா வடக்கு பிரதேசசபை தலைவர் எஸ். தணிகாசலம் உட்பட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள் வவுனியா வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் கலந்து கொண்டு இந்த விடயம் தொடர்பில் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானித்துள்ளனர்.

குறித்த போராட்டத்துக்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் பொது மக்களும் கலந்து கொண்டு சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராகக் குரல் கொடுக்க முன்வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நனோ நைட்ரஜன் இன்று நாட்டுக்கு

இந்தியாவில் இருந்து மேலுமொரு தொகுதி நனோ நைட்ரஜன் திரவ உரம் இன்று (புதன் கிழமை) நாட்டுக்குக் கிடைக்கப்பெறவுள்ளது.

அதன்படி, 24 லட்சம் லீற்றர் நனோ நைட்ரஜன் திரவ உரத்தின், இரண்டாம் தொகுதி இன்று கொண்டுவரப்படவுள்ளது.

முதற்கட்ட விநியோகத்தில் நனோ நைட்ரஜன் திரவ உரம் கிடைக்கப்பெறாத விவசாயிகளுக்கு இந்த உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முகக்கவசம் அணியாது நடமாடிய 25 பேர் யாழ்.,நல்லூரில் கைது!

யாழ் நகரில் முகக்கவசம் அணியாத 25 பேர் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டபின் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண நகரில் தற்பொழுது பண்டிகை காலம் என்பதால் பொதுமக்கள் அதிகளவில் ஒன்று கூடியுள்ள நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான அணியினர் வீதி சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்த போது, யாழ்ப்பாண நகரின் முக்கிய வீதிகளில் முகக்கவசம் அணியாது நடமாடிய 25 பேர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

குறித்த நடவடிக்கை தொடர்ச்சியாக எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கப்பல்நிர்மாணப்பணிகளுக்கு திருமலை காரியாலயம் திறப்பு

கப்பல் நிர்மாணம் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கான திருகோணமலை காரியாலயம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தலைமையில் இந்நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலை துறைமுகத்தில் இடம்பெற்றது.

ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் கொழும்பு டொக்யாட் நிறுவனம் இயங்கிவந்ததுடன், அதன் கிளைக்காரியாலயம் திருகோணமலை அஸ்ரப் துறைமுகத்தில் திறந்து வைக்கப்பட்டதால் கப்பலில் ஏற்படுகின்ற கோளாறுகளை திருகோணமலையில் திருத்தப்பணிகளை முன்னெடுக்கும் நோக்கில் கொழும்பு டொக்யாட் நிறுவனத்தால் கிளை திறக்கப்பட்டதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாளர் டீ.டீ.மாதராரச்சி தெரிவித்தார்.

அத்துடன் கிழக்கு கடற்பரப்பில் பல கப்பல்களை நிறுத்தி வைக்கக் கூடிய வசதிகள் காணப்படுகின்றன எனவும், அரசாங்கத்தால் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளோம் எனவும் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்தார். மேலும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படும் சீன உரக்கப்பல் திருகோணமலையை அண்மித்த பகுதிகளில் தென்படுவதாக தெரிவித்த கருத்தை தாம் ஆமோதிக்கிறேன் எனத் தெரிவித்தார்.

# கிராமத்தை நோக்கிய பொலிஸ் சேவை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்!

கிராமத்தை நோக்கிய பொலிஸ் சேவை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று( செவ்வாய்க்கிழமை) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கிராமத்துக்கு இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமித்து பொதுமக்களுக்கான சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராம அலுவலகர் பிரிவிலும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்கள் இருவரும் அந்தக் கிராம சேவையாளர் பிரிவில் வாரத்தில் மூன்று நாள்கள் சேவையில் ஈடுபடவேண்டும்.

கிராமத்தில் உள்ள பொதுமக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிதல் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் உள்ளிட்ட சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளை அந்தக் கிராமத்துக்கு கடமைக்கு அமர்த்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்னெடுப்பார்கள்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பக் கூட்டம் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து வருகை தந்த மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்தத் திட்டத்தை வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்க மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா முயற்சி எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு அமைப்பாளர் ஆதரவாளர்கள் கூட்டத்தில் கருத்து முரண்பாடு







ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் நடைபெற்ற போது கட்சி உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினி தலைமையில் மேற்படி கூட்டம் நேற்று (செவ்வாய்க் கிழமை) நடைபெற்றது.

இதன்போது, கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் அமைப்பாளர்கள், ஆதரவாளர்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டன. இதன்போது அந்தக் கட்சியின் வவுனியா மாவட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் தாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஐக்கிய மக்கள் சக்திக்காக செயற்படுகின்ற போதும் தாம் புறக்கணிக்கப்படுகின்றோம் எனவும், திட்டமிட்டு தம்மை தற்போது கட்சியின் மாவட்ட பதவிகளில் உள்ளோர் ஓரக்கட்டுகின்றனர் எனவும் குற்றம் சாட்டினர்.

கட்சியால் தமக்கு எந்த விடயங்களும் அறிவிக்கப்படுவதில்லை எனவும், கட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் எந்தவிதச் செயற்பாடுகளும் முன்னெடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டினர்.

பிறிதொரு ஆதரவாளர், கட்சியின் பெயரால் மக்களிடம் பணம் பெற்றவர்களே கட்சியில் இருந்து ஒதுக்கி இருக்கிறோம் எனவும், திட்டமிட்டு எவரையும் கட்சி ஓரங்கட்டவில்லை எனவும் தெரிவித்ததுடன், கட்சியின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் உள்ளன எனவும் தெரிவித்தார்.

இதன்போது பிறிதொரு உறுப்பினர், ஊடகங்கள் முன் எமது கட்சி பிரச்சினையை கதைத்து அதனை பெரிதாக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். வேறு பல உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்ததையடுத்து கருத்தறியும் செயற்பாடு நிறுத்தப்பட்டு கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார உரையாற்றியிருந்தார். கட்சி உறுப்பினர்சிலரைதனித்தனியாக சந்தித்து அவர் பேசியிருந்தார்.

மேற்படி கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏரான் விக்கிரமரட்ண, புத்திக பத்திரண மற்றும் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர் உமா சந்திர பிரகாஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2021இல் வெளியிடப்பெற்றது.